TAMIL NADU
GOVERNMENT GAZETTE
PUBLISHED BY AUTHORITY

**No.46B] CHENNAI WEDNESDAY, NOVEMBER 26,2008**
**Karhigai 11, Thiruvalluvar Aandu-2039**

## Part VI --- Section 2
(Supplement)

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

---

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானத் (திருத்தம்) விதித் தொகுப்பு**

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./DC/ 8–2, 23. 02. 2006 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதிகளைச் செயற்படுத்துவது பொறுத்து ஒருசில இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு அந்த ஒழுங்குமுறை விதியினைத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதியைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும்,

மேலேயுள்ள நோக்கத்திற்கு வகை செய்கிற திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகள் முந்திய வெளியீட்டிற்கு உட்பட்டிருப்பதாலும், மற்றும் அதற்கிணங்க அந்த முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவில் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம் 2004 ஜுலை 21ஆம் நாளிட்ட

அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ /DC/8/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI – பிரிவு 2 (பின்னிணைப்பில்) இல் வெளியிட்டுள்ளது.

**திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்**

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

(a) இந்த ஒழுங்குமுறை விதிகள், 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான (திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(b) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2006 பிப்ரவரி 23–லிருந்து நடைமுறைக்கு வரும்.

2. **ஒழுங்குமுறைவிதிக்குரியத் திருத்தம் :**

தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதித் தொகுப்பின் 29ஆம் ஒழுங்குமுறை விதியின் (14)ஆம் உள்–ஒழுங்குமுறை விதியின் (b) கூறின்படி பின்வரும் வகைமுறை புகுத்தப்படுகிறது :-

"ஆனால், உரிமம்தாரரின் தலைமை நிர்வாக அலுவலர், பிரதான வாயிலிருந்து 30 மீட்டர்களுக்கு அப்பால் உள்ள இடத்தில், –

(a) உரிமம்தாரரின் அலுவலர்கள் எளிதாக நுழையக்கூடிய மற்றும் காணக்கூடிய இடமாக,

(b) பாதுகாப்பான மற்றும் காப்புறுதியான இடமாக, மற்றும்

(c) ஒழுங்கீன நடவடிக்கையுள்ளது என சந்தேகப்படக்கூடியதல்லாத இடமாக,

அத்தகைய இடம் உள்ளது என்று அவர் திருப்தியடைவாரானால், மின் வழங்கல் முறைக்கு ஒப்புதலளிக்கலாம். மேலும், தொலைவிடத்தின் அளவினைத் தளர்வு செய்கையில், தொழில்நுட்ப ஆதாரங்களை விட்டுக் கொடுத்தல் ஆகாது.

**[தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி]**

**இரா. பாலசுப்பிரமணியன்**
**செயலாளர்**